# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு

# 2012

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 6

நேரம்: 150 மணித்துளிகள்

சுட்டெண்:

மொத்தப்புள்ளிகள் : 100

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.

1. தமிழில் உள்ள மெய் எழுத்துகள்

அ) 18 ஆ) 216 இ) 217 ஈ) 247

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. மக்களின் புறத்தோற்ற வளர்ச்சி

அ) கலைகள் ஆ) நாகரிகம் இ) பண்பாடு ஈ) கொண்டாட்டம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. புலவர் என்ற சொல்லின் பன்மை

அ) புலவோர் ஆ) புலவீர்

இ) புலவன் ஈ) புலவேர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. கதிரவன் இளவெயிலைப் பரப்பி ஒளிவெள்ளத்துள் ஆழ்த்தும் வேளை

அ) காலை ஆ) மாலை இ) இரவு ஈ) நண்பகல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. துட்டகெமுனுவால் சூழ்ச்சியான முறையில் கொல்லப்பட்ட தமிழ் மன்னன்

அ) இராவணன் ஆ) சங்கிலியன்

இ) எல்லாளன் ஈ) பண்டாரவன்னியன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. இளமையிற் கல்வி ______________ எழுத்து.

அ) சிலையில் ஆ) சிளையில் இ) சிழையில் ஈ) சிலயில்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. மூடஆமை என்பதில் மூட என்பது

அ) ஊனமுள்ள ஆ) அறிவற்ற இ) பெரிய ஈ) சிறிய

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. பேரூர் என்பதைப் பிரித்தால்

அ) பெரிய + ஊர் ஆ) பேர் + ஊர்

இ) பெருமை + ஊர் ஈ) பே + ஊர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. பின்வருவனவற்றுள் ஒன்றன்பால்

அ) சிறுவன் ஆ) மாணவர் இ) பறவை ஈ) பூனைகள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. ஓடினான் என்ற வினைச் சொல்லின் எதிர்கால வடிவம்

அ) ஓடுவான் ஆ) ஓடுகிறான் இ) ஓடுகின்றான் ஈ) ஓடியவன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. பொருட்பெயருக்கு எடுத்துக்காட்டு

அ) குடம் ஆ) ஊர் இ) நின்றான் ஈ) இலை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. நதி, வழி, ஒழுக்கம், ஒரெண் என்பதைக் குறிக்கும் ஒரு சொல்

அ) வீடு ஆ) ஆறு இ) வாரணம் ஈ) வையகம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. அழகமர் சோலை என்று மக்களால் அழைக்கப்பட்ட ஊர்

அ) அழகர்மலை ஆ) குறிஞ்சிமலை

இ) மயிலாடுமலை ஈ) இமயமலை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. ஒரு செயலைக் குறிக்கும் சொல்

அ) பெயர்ச்சொல் ஆ) வினைச்சொல்

இ) இடைச்சொல் ஈ) உரிச்சொல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. நாகதீபம் என அழைக்கப்பட்டது

அ) வட இலங்கை ஆ) தென் இலங்கை

இ) கிழக்கிலங்கை ஈ) மேற்கிலங்கை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. 'நெல்லுக்கிறைத்த நீர்' எனத் தொடங்கும் மூதுரைப் பாடலில் நெல்லுக்கு ஒப்பிடப்படுபவர்

அ) தீயோர் ஆ) நல்லோர் இ) புலவர் ஈ) வறியோர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. ப், வ் என்ற இடைநிலைகள் உணர்த்தும் காலம்

அ) இறந்தகாலம் ஆ) எதிர் காலம்

இ) நிகழ் காலம் ஈ) முடிந்த காலம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடங்கிய ஆண்டு

அ) 1972 ஆ) 1933 இ) 1833 ஈ) 1815

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. வன்சொல் என்பதன் எதிர்ப் பொருள்

அ) இன்சொல் ஆ) பெயர்ச்சொல்

இ) திசைச்சொல் ஈ) வினைச்சொல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. கப்பல் + பாதை என்பதைச் சேர்த்தால் வருவது

அ) கப்பல்ப்பாதை ஆ) கப்பல்பாதை

இ) கப்பற்பாதை ஈ) கப்பப்பாதை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. உழவுத் தொழில் செய்யும்போது பாடப்படும் பாட்டு

அ) தாலாட்டுப்பாட்டு ஆ) ஏர்ப்பாட்டு

இ) ஒப்பாரிப்பாட்டு ஈ) கும்மிப்பாட்டு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. மன்னார்க் கடலில் முத்துக் குளிக்கும் முழு உரிமையையும் பெற்றிருந்த அரசு

அ) யாழ்ப்பாண அரசு ஆ) கண்டி அரசு

இ) கோட்டை அரசு ஈ) கொழும்பரசு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. 'மறப்பேனா' என்ற பாடலை எழுதியவர்

அ) காசி ஆனந்தன் ஆ) பாரதியார்

இ) பாவேந்தர் ஈ) சின்னத்தம்பிப் புலவர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. கட்டினான் என்ற சொல்லைப் பிரித்தால் வரும் இடைநிலை

அ) ன் ஆ) ண் இ) இன் ஈ) டின்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. பாரி மகளிர் அங்கவை, சங்கவையைக் காப்பாற்றிய புலவரின் பெயர்

அ) கபிலர் ஆ) பரணர் இ) இளங்கோ ஈ) ஔவையார்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. பின்வருவனவற்றுள் பலர்பால்

அ) ஆடு ஆ) பெண் இ) அவர்கள் ஈ) பறவைகள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. அல்லல் நீக்க மாட்டாயா? என்ற பாடல் வரிகளில் அல்லல் என்பதன் பொருள்

அ) இன்பம் ஆ) மகிழ்ச்சி இ) வறுமை ஈ) துன்பம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. வேதியற் பசளைகளில் ஒன்று

அ) சாணம் ஆ) குப்பை இ) இலைகுழை ஈ) யூறியா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. தமிழீழத்தில் வெந்நீர்க் கிணறுகள் அமைந்துள்ள இடம்

அ) கந்தளாய் ஆ) கல்லோயா

இ) திருகோணமலை ஈ) யாழ்ப்பாணம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. 'வரம்போ தலகாணி - செல்லா
உனக்கு வாய்க்காலோ பஞ்சுமெத்தை'
என்ற நாட்டார் பாடலில் செல்லா என அழைக்கப்படுவது

அ) ஆடு ஆ) மாடு இ) பிள்ளை ஈ) குழந்தை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

(புள்ளிகள் 30

## 2) பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுவிடை தருக.

தமிழில் பல சிறந்த இலக்கியங்கள் காணப்படுவதைப் போன்று பழந்தமிழ்க் கலைகளும் காணப்பட்டன. இக் கலைகள் சிறந்த பொழுதுபோக்காக விளங்கின. எடுத்துக் காட்டாகக் கூத்துக் கலையைக் குறிப்பிடலாம். சிறந்த அற இலக்கியங்களாகத் திருக்குறள், நாலடியார் என்பன குறிப்பிடப்படுகின்றன. சிறந்த புற இலக்கியமாக வீரம் பற்றிக் கூறும் புறநானூறு காணப்படுகின்றது. இந்நூலில் தமிழர்களது மானம், கொடை பற்றியும் கூறப்பட்டுள்ளது. இன்று எம் பழந்தமிழ்க் கலைகளைப் பயில்வது எப்படிக் குறைந்துள்ளதோ அவ்வாறே பழந்தமிழ் இலக்கியங்களைப் படிப்பதும் குறைந்துள்ளது. முன்னர் எம் மக்கள் இத்தகைய அற இலக்கியங்களை விரும்பிப் படித்தனர். அதனால், சிறந்த வழியில் தம் வாழ்க்கையை அமைத்துக் கொண்டனர். இன்றைய வாழ்க்கை முறையில் வாசிக்கும் பழக்கம் குறைந்து வருகின்றது. வாழ்க்கை வழிகாட்டியான திருக்குறளைப் படிப்பதன் மூலம் எம் வாழ்க்கையையும் சிறப்பாக அமைத்துக் கொள்ளலாம். எம்மால் முடிந்தவரை அற இலக்கியங்களைக் கற்போம். அதன்படி வாழ்வோம். அத்துடன் எமது பழந்தமிழ்க் கலைகளையும் பேணுவோம்.

1. நாம் எவற்றைப் பேணவேண்டும்?

_______________________________________

_______________________________________

2. புறநானூறு எவற்றைக் கூறுகின்றது?

_______________________________________

_______________________________________

3. பழந்தமிழ்க் கலை ஒன்றின் பெயரைத் தருக.

_______________________________________

_______________________________________

4. எப்பழக்கம் எம்மிடையே குறைந்து வருகின்றது?

_______________________________________

_______________________________________

5. வாழ்க்கை வழிகாட்டி என இங்கு குறிப்பிடப்படும் நூல் எது?

_______________________________________

_______________________________________

(புள்ளிகள் 10)

**3) பாடநூல் வினாக்கள் ஏழில் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. அறுவடைப் பாடல் எப்போது பாடப்படும்?

2. ஆ(பசு) தரும் பயன்கள் இரண்டு கூறுக.

3. கந்தளாய்க் குளத்தைக் கட்டிய மன்னன் யார்?

4. பின்வரும் குறளை நிறைவு செய்க

   ஏதிலார் குற்றம்போற்ற ங்குற்றங் காண்கிற்பின்

5. தமிழீழ விடுதலைப் போராட்டம் ஏன் ஆயுதப் போராட்டமாக மாறியது?

6. கொண்டாட்டங்களின் போது காணப்படும் பொதுத்தன்மை இரண்டு தருக.

7. நாம் எத்தகைய உணவுகளை உண்ண வேண்டும்?

(புள்ளிகள் 10)

4) **கீழ்வரும் பாடல் வினாக்களுக்கு முழுவிடை தருக.**

*வழுக்கி விழுந்திடாமலே*
*வாழை மரத்தில் ஏறவும்*
*உழைத்துப் பயின்றால் முடியுமே, இதற்கு*
*உறுதி வேண்டும் மனத்திலே.*

*இரும்புப் பட்டை தன்னையே*
*இழுத்துத் தீட்டத் தீட்டவே*
*அரிவாள் கிடைக்கும் -எதனையும்*
*ஆக்கலாமே முயற்சியால்.*

*குயிலைப் போலப் பாடவும்*
*கோல மயிலாய் ஆலவும்*
*பயிற்சி செய்தால் முடியுமே*
*பழக வேண்டும் நாளுமே.*

1. மனதில் எது வேண்டும்?

_______________________________________________

_______________________________________________

2. அரிவாள் எதில் செய்யப்படுகின்றது?

_______________________________________________

_______________________________________________

3. பாடலில் வந்த இரு பறவைகளின் பெயர்கள் எவை?

_______________________________________________

_______________________________________________

4. குயிலைப் போலப் பாட என்ன செய்ய வேண்டும்?

_______________________________________________

_______________________________________________

5. எதையும் ஆக்குவதற்கு என்ன வேண்டும் எனக் கூறப்படுகின்றது?

_______________________________________________

_______________________________________________

(புள்ளிகள் 10)

5) இலக்கண -மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. அறுவகைப் பெயர்ச் சொற்களும் எவை?

______________________________________________

______________________________________________

______________________________________________

2. கீழே தரப்பட்டுள்ள சொல் பெயராகவும் வினையாகவும் அமையுமாறு வாக்கியம் (சொல்லியம்) எழுதுக.

அடி

பெயர்:- ______________________________________________

வினை:- ______________________________________________

3. 'ஆடினார்கள்' இச்சொல்லில் இடம்பெறும் திணை, பால், இடம் என்பவற்றைக் குறிப்பிடுக.

திணை:-______________________________________________

பால்:- ______________________________________________

இடம்:- ______________________________________________

4. தனி வாக்கியம் (சொல்லியம்), தொடர் வாக்கியம் (சொல்லியம்) இரண்டிற்கும் ஒவ்வொரு எடுத்துக்காட்டுத் தருக.

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

5. பின்வரும் வாக்கியத்தில் (சொல்லியத்தில்) இடம்பெறும் எழுவாய், செயப்படு பொருள், பயனிலை என்பவற்றை எழுதுக.

**தம்பி வண்ணாத்துப் பூச்சியைப் பிடித்தான்.**

எழுவாய்:- ______________________________

பயனிலை:- ______________________________

செயற்படு பொருள்:-______________________________

(புள்ளிகள் 15)

**6. பந்தியைத் தமிழ்மொழியில் மாற்றி எழுதுக.**

I watch televisin. I like to watch tamil film very much. I also listen to the songs in the film. I sing them happily. My sister listen to those songs too.

Ik kijk naar de televisie. Ik kijk graag naar de tamil films. Ik luister ook de liedjes van deze films. Ik zing graag de liedjes van die films. Mijn zus luistert ook de liedjes luisteren.

Jeg ser på fjernsyn. Jeg liker veldig godt å se tamilske filmer. Jeg hører også på sangene fra filmen. Jeg synger disse sangene med glede. Min lillesøster liker også å høre på sanger.

Ich schaue gerne Fern. Vor allem mag ich es, tamilische Filme anzuschauen. Außerdem höre ich mir die Lieder in den Filmen gerne an. Mit sehr viel Freude singe ich sie auch nach. Auch meine kleine Schwester hört sich diese Lieder an.

Jeg vil se fjernsyn. Jeg kan meget godt lide at se tamilsk film. Jeg hører også sangene fra filmene. Jeg synger dem med glade. Min lillesøster hører også på den sang.

Io guardo la tv. Mi piace molto guardare i film Tamil. Io ascolto anche le canzoni che ci sono nel film. E li canto con piacere. Anche mia sorella li ascolta

J'ai l'habitude de regarder la télévision. J'aime beaucoup regarder les films Tamouls. J'écoute les chansons provenant de ces films. Je les chante avec plaisir. De plus, ma petite sœur les écoute aussi.

Jag brukar kolla på tv. Jag gillar att kolla mycket på tamilska filmer. Jag brukar höra på låtar från filmen. Jag brukar sjunga låtarna lyckligt. När jag sjunger så lyssnar min syster på det.

(புள்ளிகள் 05)

8) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து, 100 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.

1. மாமன்னன் எல்லாளன்.

2. வீட்டுத் தோட்டம்.

3. நீரும் உமது நண்பனும்.

(புள்ளிகள் 20)